அதைப்போல தென்னை மரங்களைப் பொறுத்தவரையிலும், கன்னியாகுமரி மாவட்டத்தில் 29 தென்னை மரங்களுக்குத்தான் சேதம் ஏற்பட்டிருக்கிறது என்ற புள்ளிவிவரம் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, அதற்கும் உரிய நிவாரணத் தொகைகள் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

(இ) நீலகிரி, திண்டுக்கல் மாவட்டங்களில் பெய்த ஆலங்கட்டி மழையால் ஏற்பட்ட சேதம்—தொடர்ச்சி

***மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்களும், திரு. புத்திசந்திரன் அவர்களும் மார்ச் மாதம் பெய்த ஆலங்கட்டி மழையினால் ஏற்பட்ட சேதத்தினைப் பற்றி இங்கே குறிப்பிட்டுக் காட்டினார்கள். அதற்குரிய புள்ளிவிவரங்கள் என்னிடத்தில் இல்லை. சட்டமன்ற உறுப்பினர்கள் இங்கே உரையாற்றுகிறபோது இப்போதுதான் குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறார்கள். அதற்குரிய புள்ளிவிவரங்களை நான் பெற்று, அவர்களுக்கும் விரைந்து அந்தத் தொகையை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதையும் நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

“இறைவனிடம் கையேந்துங்கள், அவர் இல்லை என்று சொல்லுவதில்லை” என்பதைப்போல இறைவனாகக் காட்சி அளித்துக் கொண்டிருக்கிற புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில் அனைத்து நிவாரணப் பணிகளும் நிறைவேற்றித் தரப்படும் என்பதையும் மகிழ்ச்சியோடு நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதுபோன்று எந்தெந்தப் பகுதிகளிலே சேதங்கள் ஏற்பட்டிருக்கின்றன என்று சட்டமன்ற உறுப்பினர்கள் குறிப்பிட்டுக் காட்டுவார்களேயானால், ஒரு வார காலத்திற்குள்ளாகவே விரைந்து அதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதையும் நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஈ) போக்குவரத்து வாகனங்களுக்கு ஒரே சீரான வரி விதிப்பு முறையை அமல்படுத்துதல்—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. குணசேகரன் அவர்கள் கொண்டு வந்த கவன ஈர்ப்பு குறித்து மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் தமது பதிலுரையை அளிப்பார்கள்.

***மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்து வாகனங்களுக்கு வெவ்வேறான வரி விதிப்பின் அடிப்படையில் காலாண்டு, முழு ஆண்டு, ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை என வரி வசூலிக்கப்படுவது நடைமுறையாக இருந்து வந்தது. அவற்றைச் சீராக்கி எளிய முறையில் வரி விதிப்பை நடைமுறைப்படுத்துவதன் அவசியத்தைக் கருத்தில் கொண்டு, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய நல்லாட்சியில், சுற்றுலா சீருந்து, சுற்றுலா maxicab, தனியார் சேவை வாகனம், உபரிப் பேருந்து, கட்டுமானத் தளவாட ஊர்திகள், தற்காலிக அனுமதி வழங்கப்படும் ஒப்பந்த ஊர்திகள் போன்ற போக்குவரத்து வாகனங்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய நல்லாட்சியில் ஏழையெளிய மற்றும் நடுத்தர மக்கள் நலன் காக்கும்வண்ணம் போக்குவரத்து வாகனங்களுக்குண்டான வரி விதிப்பில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. ஏனென்று சொன்னால், அந்த வரி விதிப்பு என்பது—கடந்த காலங்களில் தனியார் தம் சொந்த உபயோகத்திற்குப் பயன்படுத்தக்கூடிய வாகனங்களுக்கு ஆயுட்கால வரியைச் செலுத்துகிறோம். இந்த ஆயுட்கால வரி உயர்வு என்பது கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் குறிப்பாக சொந்த உபயோகத்திற்குப் பயன்படுத்தும் வாகனத்திற்கு 1–6–2010 முதல் வரி என்பது ஆயுட்கால வரி உயர்வை நடைமுறைக்குக் கொண்டு வந்திருக்கின்றார்கள். ஏற்கெனவே, life time tax என்பது, 1998 ஆம் ஆண்டு ஜூலை 1 முதல் தி.மு.க. ஆட்சியில் நடைமுறைப்படுத்தப்பட்டது. இந்த life time tax என்பது சொந்த வாகனத்திற்கு, நாம் வைத்திருக்கின்ற வாகனத்திற்கு life time tax செலுத்துகிறோம். ஆனால், மற்ற பொதுப் பயன்பாட்டிற்குப் பயன்படுத்துகின்ற வாகனங்களுக்கு, இருக்கைகளின் அடிப்படையில் வாகனங்களுக்கு மாற்றம் இருந்தது. அந்த மாற்றத்தைச் சீராக்கி ஒரே நடைமுறை கொண்டுவரப்பட வேண்டும் என்பதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் சீரிய நடவடிக்கை எடுத்து, இதை ஒழுங்குமுறைப்படுத்துகின்ற வகையில் அதற்குண்டான சீரமைப்புகள் செய்யப்பட்டிருக்கின்றன.

சுற்றுலா சீருந்து என்பது ஏழையெளிய மற்றும் நடுத்தர மக்கள் பயன்படுத்தும் கட்டண மீட்டர் பொருத்திய சாதாரண motor cab வாகனத்திற்கு ஏற்கெனவே உள்ள வரி முறையில் எந்த மாற்றமும் இல்லை. அதேபோல சுற்றுலா சீருந்துகளுக்கு மட்டும் வரி செலுத்துகின்ற முறை மாற்றி அமைக்கப்பட்டிருக்கின்றன. வாகன உரிமையாளர்கள் எளிதாக வரி செலுத்துவதற்காக இந்த ஆயுட்கால

2012 ஏப்ரல் 26] [திரு. வி. செந்தில்பாலாஜி]

வரி முறை அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. 10 இலட்சத்திற்குள் உள்ள வாகனங்களுக்கு 10 சதவீதம் என்று வரி விதிப்பில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. 10 இலட்சத்திற்கு மேல் உள்ள வாகனங்களுக்கு ஆயுட்கால வரியாக 15 சதவீதம் வரி விதிப்பில் மாற்றம் செய்யப்பட்டு புதிய முறை கொண்டு வரப்பட்டிருக்கின்றது. சுற்றுலா maxicab வாகனம் என்பது ஏழையெளிய நடுத்தர மக்கள் அன்றாடம் பயன்படுத்தக்கூடிய அந்த அடித்தட்டு மக்களுடைய— அலுவலகத்திற்குச் செல்பவர்கள் பயன்படுத்தக்கூடிய அந்த சுற்றுலா maxicab வாகனங்களுக்கு தரைப் பரப்பளவு என்பது 6 சதுர மீட்டருக்கு மிகைப்படாமல் உள்ள maxicab வாகனங்களுக்கு, ஏற்கெனவே உள்ள வரி வசூல் நடைமுறையில் எந்த மாற்றமும் செய்யப்படவில்லை.

முற்பகல் 11–20

6 சதுர மீட்டருக்கு மேலே தரைப் பரப்பளவு உள்ள Maxicab வாகனத்திற்கு ஆயுட்கால வரி செலுத்தும் முறையில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இந்த 6 சதுர மீட்டருக்கும் மேலுள்ள, பத்து இலட்சத்திற்குள் இருக்கும் வாகனங்களுக்கு 10 சதவிகிதமும், பத்து இலட்சத்திற்கும் மேலுள்ள வாகனங்களுக்கு 15 சதவிகிதமும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. 6 சதுர மீட்டரிலிருந்து 8 சதுர மீட்டர் வரை உள்ள வாகனங்களுக்கு காலாண்டுக்கு ரூ.420 என்ற அடிப்படையிலும், 8 சதுர மீட்டருக்கு மேலுள்ள வாகனங்களுக்கு ரூ.450 என்ற நடைமுறையிலும் காலாண்டுக்கு மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. எனவே வரி விதிப்பு என்பது ஒருமுறைப்படுத்தப்பட்டிருக்கின்றது. தனியார் வாகனங்கள், சொந்த பயன்பாட்டிற்குப் பயன்படுத்துகின்ற வாகனங்களுக்கு ஆயுட்கால வரியைச் செலுத்துகின்றோம். மற்ற பொதுப் பயன்பாட்டிற்குப் பயன்படுத்துகின்ற வாகனங்களுக்கு இருக்கையின் அடிப்படையில் வரி விதிப்புகள் ஏற்கெனவே இருந்தன. இதை ஒருமுறைப்படுத்த வேண்டும் என்பதற்காக இந்த ஒரே நடைமுறையை மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய இந்த நல்ல அரசு, ஏழை எளிய மக்கள்மீது அக்கறை கொண்டு இது ஒருமுறைப்படுத்தப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொண்டு அமர்கிறேன்.